# கண்ணேறு, சூனியம், கெட்ட ஜின்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழிமுறைகள்

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

தொகுப்பு: அஸ்ஹர் யூஸுஃப் ஸீலானி

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

## கண்ணேறு, சூனியம், கெட்ட ஜின்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழி முறைகள்:

அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை வைத்து அவனுக்கு கட்டுப்படல், அவனை அஞ்சுதல், உளத் தூய்மை, பாவங்களை விட்டு விலகி நன்மைகளைச் செய்தல், அல்குர்ஆனையும், சுன்னாவையும் பற்றிப்பிடித்தல், வீடுகளிலிந்து உருவப்பட்டங்களை அகற்றல், நாய்களை அப்புறப்படுத்தல், அல்லாஹ்வை அதிகம் நினைவு கூறல், முஸ்லிம் கூட்டமைப்பை பற்றிப் பிடித்தல், எப்போதும் ஷைத்தானுக்கு மாறு செய்தல், அதிகம் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடல், தீய எண்ணங்களுக்கு, ஷைத்தானிய ஊசலாட்டங்களுக்கு சந்தர்பம் கொடுக்காமலிருத்தல், அதிகம் அல்குர்ஆனை ஓதல். சுன்னத்தான நபிஃலான வணக்கங்களில் அதிகம் ஈடுபடல். ஹராமானவைகளை விட்டு விலகி, ஹலாலை பற்றிப் பிடித்தல்.

அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணிந்து, அவன் மீது நம்பிக்கை மற்றும் தவக்குல் வைத்து, ஷிர்கிலிருந்து முழுமையாக விடுபட்டு செயல்படல். (அல்குர்ஆன் 17: 65) (அல்குர்ஆன் 16: 99,100)

ஷைத்தானின் தீங்குகளிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடல்:

أَعُوذُ بِاللَّهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ

(7: 200), (41,36).

رَّبِّ اَعُوْذُ بِكَ مِنْ هَمَزٰتِ الشَّيٰطِيْنِۙ وَاَعُوْذُ بِكَ رَبِّ اَنْ يَّحْضُرُوْنِ

இன்னும்: நீர் கூறுவீராக! “என் இறைவனே! ஷைத்தானின் தூண்டுதல்களிலிருந்து நான் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன்” (என்றும்). “இன்னும் அவை என்னிடம் நெருங்காமலிருக்கவும் என் இறைவனே! உன்னிடம் காவல் தேடுகிறேன்” (என்று கூறுவீராக)! (23: 97,98).

**மாலை நேரங்களில் இந்த துஆவை ஓதிக் கொள்ளல்:**

أَعُوذُ بِكَلِمَاتِ اللَّهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

(அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 7055).

காலை, மாலை, இரவில் தூங்கச் செல்லும் போது, கடமையான தோழுகைகளுக்குப் பின் ஓத வேண்டிய துஆக்கள், திக்ருகள், சந்தர்ப துஆக்கள் ஆகியவற்றை ஓதிக் கொள்வது.

ஐவேளைத் தொழுகைக்குப்பின், இரவில் தூங்கச் செல்லும் முன் ஆயதுல் குர்ஸியை ஓதுதல்

(அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புஹாரி 3275)
(அறிவிப்பவர்: அபூ உமாமா (ரலி) அவர்கள், ஸுனனுல் குப்ரா பிஃன்னஸாயி 9848

பகரா அத்தியாயத்தை வீட்டில் ஓதுதல். அந்த வீட்டிலிருந்து ஷைத்தான் விரண்டோடுகிறான். (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1860

அல்பரா அத்தியாயத்தின் இறுதி இரண்டு வசனங்களை இரவில் ஓதுதல். அது அவனுக்கு போதுமானதாகும். (அறிவிப்பவா: அபூமஸ்ஊத் அல் அன்ஸாரி (ரலி) அவர்கள், புஹாரி 4723)

எந்த வீட்டில் அல்பகாரா அத்தியாயத்தின் இறுதி இரண்டு வசனங்கள் ஓதப்படுகின்றதோ ஷைத்தான் அந்த வீட்டுக்கு மூன்று இரவுகளுக்கு நெறுங்க மாட்டான். (அறிவிப்பவர்: நுஃமான் இப்னு பஷீர் (ரலி) அவர்கள், அஹ்மத் 18438).

"பகரா அத்தியாயத்தை எடுத்துக் கொள்வது பரக்கத்தாகும். அதை விடுவது கைசேதமாகும். அது சூனியக்காரர்களை இயலாமலாக்கி விடும். (அறிவிப்பவர்: அபூ உமாமா அல்பாஹிலிய் (ரலி) அவர்கள், , முஸ்லிம் 1910.

(பகரா அத்தியாயத்தை ஓதுவது, அதை விளங்குவது, அதன் கட்டளைகளை ஏற்றும், தடுத்தவைகளிலிருந்து விழகியும் வாழ்வது).

பாதுகாப்புத்தேடும் சிறந்த ஒன்றை உமக்கு அறிவிக்கட்டுமா என அல்லாஹ்வின் தூதர் இப்னு ஆபிஸுல் ஜுஹனி என்ற தோழரிடம் கேட்டார்கள். நான் அறிவியுங்கள் எனக் கூறினேன். அதற்கு அல்பஃலக், அந்நாஸ் அத்தியாயங்களை குறிப்பிட்டார்கள் (அஹ்மத் 17336).

நோயின் போது குல் ஸுராக்களை ஓதி உள்ளங் கைகளில் ஊதி முழு உடலிலும் தடவிக் கொள்வது. இவ்வாறு நபியவர்கள் செய்பவர்களாக இருந்தார்கள் என ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புஹாரி 5735).

இரவில் தூங்கச் செல்லும் போது இரு உள்ளங் கைகளையும் சேர்த்து அதில் ஊதி மூன்று குல் ஸுராக்களையும் ஓதி முழு உடலிலும் இயன்ற மூன்று முறை தடவுவது. (அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புஹாரி 5017).

لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَىْءٍ قَدِيرٌ

என்பதை ஒவ்வொ நாளும் 100 முறை ஓதி வருதல்
அதன் மூலம் கிடைக்கும் 5 விதமான நன்மைகள்:
1- 10 அடிமைகளை உரிமையிட்ட நன்மை, 2- 100 நன்மைகள் பதியப்படும் 3- 100 பாவங்கள் மன்னிக்கப்படும். 4- மாலை வரை ஷைத்தானிலிருந்து பாதுகாப்பு. 5- அவர் தான் அல்லாஹ்விடத்தில் சிறந்ததை கொண்டு வந்தவர். அவரைப் போன்றோ, அவரை விட அதிகம் கூறியவரைத் தவிர. (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 7018).

**பிஸ்மில்லாஹ் ஓதுவதற்கு** இஸ்லாம் குறிப்பிட்ட சந்தர்பங்களில் பிஸ்மில்லாஹ் ஓதிக் கொள்ளல்:

வீட்டுக்குள் நுழையும் போது, வீட்டு வாயிலை மூடும் போது, உணவை உற்கொள்ளும் போது, பாத்திரங்களை மூடும் போது, விரிப்பை தட்டும் போது,

**தீய ஜின்களால் பாதிப்புக்குள்ளானவர்களுக்குரிய பரிகாரம்:**

அவ்வாறான பாதிப்பா என்பதை சந்தேகமற உறுதியாக்கிக் கொண்டதன் பின் அவர்களில் சொந்தக்காரர்களே அவருக்கு ஓதி விடலாம். நிவாரணமளிப்பவன் அல்லாஹ் என்ற முழு நம்பிக்கையுடன் ஓதுதல், ஷிர்க்கான வார்த்தைகள் ஏதும் இடம் பெறக்கூடாது, தெரிந்த மொழியில் அமைய வேண்டும். அல்குர்ஆனின் மூலமும், ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களில் இடம் பெற்ற துஆக்களின் மூலம் ஓதிப் பார்ப்பதே மிகச் சிறந்தது. ஷைத்தானின் சூழ்ச்சிகளை முறியடிப்பதும், அவனை வெறுண்டோடச் செய்வதும் அல்லாஹ்வின் வார்த்தைகளே என்ற முழு நம்பிக்கையுடன் ஓதுவது.

**அல்குர்ஆன் ஷிபாஃ என்பதற்கான ஆதராங்கள்:**

இன்னும், நாம் முஃமின்களுக்கு ரஹ்மத்தாகவும், அருமருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் (படிப்படியாக) இறக்கிவைத்தோம்; ஆனால் அக்கிரமக்காரர்களுக்கோ இழப்பைத் தவிர வேறெதையும் (இது) அதிகமாக்குவதில்லை. (17:82.)

மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக ஒரு நல்லுபதேசமும் வந்துள்ளது. (உங்கள்) இதயங்களிலுள்ள நோய்களுக்கு அருமருந்தும் (வந்திருக்கிறது;) மேலும் (அது) முஃமின்களுக்கு நேர்வழிகாட்டியாகவும், நல்லருளாகவும் உள்ளது. (10:57)

**கீழே குறிப்பிடப்படும் அத்தியாயங்கள், வசனங்கள் நிவாரணிக்கு மிகச் சிறப்பானவை:**

அல்பகரா அத்தியாயத்தை ஓதுவது
ஆயதுல் குர்ஸியை ஓதுவது
பகராவின் இறுதி இரண்டு வசனங்களை ஓதுவது
குல் ஸூராக்களை ஓதுவது

(இவைகளுக்கான ஆதாரங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன).

அல்பஃதிஹா அத்தியாயத்தை ஓதுவது (அறிவிப்பவர்: அபூஸஈதுல் குத்ரியி (ரலி) அவர்கள், புஹாரி 5736).

**நோயாளிக்கு குணம் கிடைப்பதற்காக ஹதீஸ்களில் இடம் பெற்ற இப்பிரார்த்தனைகளைக் கொண்டு அல்லாஹ்விடம் பிரார்த்திப்பது:**

اللَّهُمَّ رَبَّ النَّاسِ مُذْهِبَ الْبَاسِ اشْفِ أَنْتَ الشَّافِي لاَ شَافِيَ إِلاَّ أَنْتَ شِفَاءً لاَ يُغَادِرُ سَقَمًا

(அறிவிப்பவர்: அனஸ் (ரலி) அவர்கள், புஹாரி 5742).

أَذْهِبِ الْبَاسَ رَبَّ النَّاسِ اشْفِ وَأَنْتَ الشَّافِي لاَ شِفَاءَ إِلاَّ شِفَاؤُكَ شِفَاءً لاَ يُغَادِرُ سَقَمًا

(அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புஹாரி 5675).

(பொருள்: இறைவா! மக்களை இரட்சிப்பவனே! துன்பத்தைப் போக்குபவனே! குணமளிப்பாயாக! நீயே குணமளிப்பவன். உன்னைத் தவிர குணமளிப்பவர் வேறு எவருமில்லை. அறவே நோய் இல்லாதவாறு குணமளிப்பாயாக.)

بِاسْمِ اللَّهِ أَرْقِيكَ مِنْ كُلِّ شَىْءٍ يُؤْذِيكَ مِنْ شَرِّ كُلِّ نَفْسٍ أَوْ عَيْنِ حَاسِدٍ اللَّهُ يَشْفِيكَ بِاسْمِ اللَّهِ أَرْقِيكَ

அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப்பார்க்கிறேன். உமக்குத் தொல்லை தரும் அனைத்து அம்சங்களிலிருந்தும், பொறாமை கொள்ளக்கூடிய அனைவரின் அல்லது கண்களின் தீமையிலிருந்தும் உமக்கு அல்லாஹ் நிவாரணமளிப்பானாக. அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப்பார்க்கிறேன்.) (அறிவிப்பவர்: அபூ ஸஈத் (ரலி) அவர்கள் ஆதாரம்: முஸ்லிம் 4403).

நோயாளியிடம் இந்த துஆவை 7 முறை கூறுவது:

أَسْأَلُ اللَّهَ الْعَظِيمَ رَبَّ الْعَرْشِ الْعَظِيمِ أَنْ يَشْفِيَكَ

மகத்துவிமிக்க அல்லாஹ்விடம், மகத்துவமிக்க அர்ஷின் ரப்பிடம் உனக்கு குணம் கிடைக்க பிரார்த்திக்கின்றேன். (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், அஹ்மத் 2137).

بِسْمِ اللهِ تُرْبَةُ أَرْضِنَا بِرِيقَةِ بَعْضِنَا يُشْفَى سَقِيمُنَا بِإِذْنِ رَبِّنَا

(பொருள்: அல்லாஹ்வின் பெயரால்... எங்களில் சிலரின் உமிழ் நீரோடு எம்முடைய இந்த பூமியின் மண் (இணைந்தால் அது) எங்கள் இறைவனின் ஆணையின்பேரில் எங்களில் நோயுற்று இருப்பவரைக் குணப்படுத்தும்.) (அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புஹாரி 5745).

இமாம் இப்னுல் கைய்யூம் ரஹிமஹுல்லாஹ் கூறுகின்றார்கள்: பிஸ்மில்லாஹ் எனக் கூறி அல்லது லா ஹவ்ல வலாகுவ்வத இல்லா பில்லாஹ் எனக் கூறி இவரிலிருந்து வெளியேறு, அல்லது அல்லாஹ்வின் எதிரியே வெளியேறு எனக் கூறுங்கள்.

**சூனியத்தால் பாதிப்பு ஏற்பட்டால்:**

1- அல்லாஹ்வின் தூதருக்கு சூனியத்தால் பாதிப்பு ஏற்பட்ட போது அல்லாஹ்விடமே தொடர்ந்து நிவாரணத்துக்காக பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் அவருக்கு குணத்தை வழங்கினான்.

2- நபியவர்களுக்கு அல்லாஹ் இரு வானவர்கள் மூலம் அவர்களுக்கு சூனியம் வைக்கப்பட்ட இடத்தை தெரியப்படுத்தினான். எனவே அவர்கள் அந்த இடத்துக்கு சென்று அந்த கிணற்றிலிருந்து அதை வெளியே எடுத்தார்கள். எனவே இது போன்று பாதிப்புக்குள்ளானவர்களுக்கு தனக்கு சூனியம் வைக்கப்பட்ட இடத்தை அறிந்து கொள்ள சந்தர்பம் கிடைத்தால், சில வேளை சூனியம் வைத்தவனே மனம் திருந்தி அந்த இடத்தை கூறினால் அந்த இடத்திக்கு சென்று அதை வெளியேற்ற வேண்டும். ஆனால் அதற்காக சூனியக்ககாரர்களை நாடுவது முற்றிலும் தடுக்கப்பட்டதாகும்.

அடுத்து சிலர் எண்ணுவது போல் சூனியத்தை அவிழ்ப்பதன் மூலம் தான் குணம் கிடைக்கும் என்பது தவறான நம்பிக்கையாகும். நபியவர்கள் அவிழ்ப்பதன் மூலம் மக்கள் குழப்பமடைந்துவிடுவார்களோ என்பதைத்தான் அஞ்சினார்கள். அதை அவிழ்க்காமலே அல்லாஹ் அவர்களுக்க குணமளித்து விட்டான். எனவே அவிழ்த்தால்தான் குணம் கிடைக்கும் என்பது தவறான நம்பிக்கையாகும். அதனால் ஷைத்தான் உறவுகளுக்கு, அயலவர்களுக்கு, நண்பர்களுக்கு மத்தியில் பகையை ஏற்படுத்தவே விரும்புகிறான். சூனியத்தை அவிழ்ப்பது ஷைத்தானீய தீய செயலாகவும் நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.

3- அல்குர்ஆனை ஓதுவது குறிப்பாக வந்து சூராக்களை, வசனங்களை ஓதுவது. ஹதீஸில் வந்து துஆக்களை ஓதுவது. அவைகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன.

4- சூனியம் தொடர்பாக அல்குர்ஆனில் இடம் பெற்ற வசனங்களை ஓதுதல். முழுக்குர்ஆனும் ஷிபாஃ என்பதை முன்னர் பார்த்தோம். அந்த அடிப்படையில் அல்அஃராப்ஃ 7 அத்தியாயத்தின் 106 - 122 வரை). யூனுஸ் 10 அத்தியாயத்தின் 79- 82 வரை) தாஹா 65-69 வரை. அல்பகரா அத்தியாயத்தின் 102 வசனம் ஆகியவைகளாகும்.

5- இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் தினந்தோறும் காலையில் (வெறும் வயிற்றில்) ஏழு 'அஜ்வா' (ரகப்) பேரீச்சம் பழங்களைச் சாப்பிடுகிறவருக்கு, அந்த நாள் எந்த விஷமும் இடரளிக்காது; எந்தச் சூனியமும் அவருக்கு இடையூறு செய்யாது. என ஸஅத் இப்னு அபீ வக்காஸ்(ரலி) அறிவித்தார். புஹாரி 5445).

ஓதிப்பார்த்தல் என்பதை பொறுத்த வரை ஷிர்கில்லாமல் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் உயர்ந்த வார்த்தைகள், அவனது பெயர்கள், பண்புகளின் மூலம் அவைகள் அமைய வேண்டும். தெரியாத மொழிகளில் உள்ள மந்திரங்களாக அவைகள் இருக்கக்கூடாது. அடுத்து குணமளிப்பவன் அல்லாஹ் என்ற முழு நம்பிக்கை இருக்க வேண்டும். காரண, காரணிகளை உருவாக்கும் அல்லாஹ்வை விட காரண, காரணிகளின் மீது நம்பிக்கை வைத்து விடக்கூடாது.

## கண்ணேறுக்கான பரிகாரம்:

ஆச்சரியப்படத் தக்க விதத்தில் ஏதாவது ஒன்றைப் பார்த்து விட்டால் பரக்கத்துக்காக துஆச் செய்தல் (அறிவிப்பவர்: அபூ உமாமா (ரலி) அவர்கள், அஹ்மத் 16023).

**بَارَكَ اللَّهُ لَكَ** அல்லது **بَارَكَ اللَّهُ لَهُ** அல்லது **بَارَكَ اللَّهُ لَهُ فِي أَهْلِهِ وَمَالِه وَوَلَدِهِ وَسَيَّارَتِهِ وَبَيْتِهِ**

அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்கே ஓதிப்பார்த்துக் கொள்ளுமாறு சொன்னது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

இவருடைய கண்ணால்தான் பாதிப்பு ஏற்பட்டது என உறுதியகாத் தெரியும் போது அவர் குளித்து அல்லது வுழூச் செய்து கொடுக்கும் தண்ணியை பாதிக்கப்பட்டவர் தனது தலையிலும், மேணியிலும் ஊற்றிக் கொள்வது.
(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5831)
அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், அபுதாவூத் 3882)
(அறிவிப்பவர்: அபூ உமாமா (ரலி) அவர்கள், அஹ்மத் 16023).

أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّةِ مِنْ كُلِّ شَيْطَانٍ وَهَامَّةٍ وَمِنْ كُلِّ عَيْنٍ لامَّةٍ.

'அல்லாஹ்வின் முழுமையான (குணமளிக்கும்) சொற்களைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும் நச்சுப் பிராணியிடமிருந்தும் தீய எண்ணத்துடன் தீண்டும் (பொறாமைக்) கண்ணிலிருந்தும் அவனிடம் பாதுகாப்புக் கோருகிறேன்" அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 3371)

அல்பஃலக், அந்நாஸ் அத்தியாயங்களை ஓதிக் கொள்வது (அறிவிப்பவர்: அபூ ஸஈத் (ரலி) அவர்கள், திர்மிதி 3511).

**நோயுற்றவர்களுக்காக மற்றவர்கள் ஓதும் துஆக்களில்:**

بِاسْمِ اللَّهِ أَرْقِيكَ مِنْ كُلِّ شَىْءٍ يُؤْذِيكَ مِنْ شَرِّ كُلِّ نَفْسٍ أَوْ عَيْنِ حَاسِدٍ اللَّهُ يَشْفِيكَ بِاسْمِ اللَّهِ أَرْقِيكَ

அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப்பார்க்கிறேன். உமக்குத் தொல்லை தரும் அனைத்து அம்சங்களிலிருந்தும், பொறாமை கொள்ளக்கூடிய அனைவரின் அல்லது கண்களின் தீமையிலிருந்தும் உமக்கு அல்லாஹ் நிவாரணமளிப்பானாக. அல்லாஹ்வின் பெயரால் உமக்கு ஓதிப்பார்க்கிறேன்.) (அறிவிப்பவர்: அபூ ஸஈத் (ரலி) அவர்கள் ஆதாரம்: முஸ்லிம் 4403).

கண்ணேறுக்கு இன்று பலரும் மார்க்க கற்றுத் தந்த வழி முறைகளை விட்டு ஷிர்கான, பித்அத்தான முறைகளில் தேடிக் கொண்டிருக்கின்றார்கள் இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். மேலே சொன்ன முறைதான் மார்க்கம் கற்றுத் தந்த அல்லாஹ்வின் முழுமையான பாதுகாப்பு கிடைக்கும் முறையாகும்.

தொகுப்பு: அஸ்ஹர் யூஸுஃப் ஸீலானி
அழைப்பாளர் அல்கொபார் தஃவா நிலையம் - தமிழ் பிரிவு